**Judicial Form No.53**
**(See Rule 42)**
DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 13.05.2024**

**Case No : CC 91 / 2019**

**Deposition of Witness : P.W. 3**

| | |
|---|---|
| **Name:** கனகராஜ் | **Caste:** |
| **Father / Husband Name:** ராஜமணி | **Calling:** |
| **Village:** பூச்சிக்காடு | **Religion:** |
| **Taluk:** சாத்தான்குளம் | **Age: 48** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 13.05.2024**

<u>முதல் விசாரணை:</u>

நான் பூச்சிக்காட்டில் குடியிருந்து ஓட்டுனராக பணியாற்றி வருகிறேன். அ.சா.1 என் மனைவி ஆவார். எதிரியை தெரியும். எனது ஊரை சேர்ந்தவர். என் மனைவி அ.சா.1 மகளிர் சுயஉதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளார். வழக்கமாக 25ம் தேதி கூட்டம் நடைபெறும். கடந்த 25.4.2019ம் தேதி மாலை 5.00 மணியளவில் மகளிர் குழு உறுப்பினர்கள் கூட்டம் நடத்தினார்கள். அதில் அ.சா.1 எதிரியின் அம்மாவுடன் பேசிக் கொண்டிருந்தார். அப்போது அங்கு குடிபோதையில் வந்த எதிரி அ.சா.1ஐப் பார்த்து என் அம்மாவிடம் நீ எப்படி கைநீட்டி பேசலாம் புண்டமவளே தேவடியாமவளே என்று ஆபாசமாக பேசி அ.சா.1ஐ அடித்தார். இந்த தகவலை என்னிடம் போன் மூலம் அ.சா.1 சொன்னார். நான் உடனே சம்பவ இடத்திற்கு சென்றேன். நான் சென்றவுடன் என்னையும் எதிரி கீழே தள்ளிவிட்டு என் மனைவியை கன்னத்தில் அடித்து கட்டையால் அ.சா.1ன் தலையில் அடித்தார். அதனால் அ.சா.1 மயங்கி விழுந்து விட்டார். அதனால் அவருக்கு தலையில் ரத்தக்காயம் ஏற்பட்டது. நாங்கள் தண்ணீர் தெளித்து அ.சா.1ஐ எழுப்பிவிட்டோம். பின்பு காயம்பட்ட அ.சா.1 உடன் காவல்நிலையம் சென்று பின்பு சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். இதுசம்பந்தமாக அ.சா.1 புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

முதல் விசாரணையில் சொல்லியதைத்தான் காவல்துறை விசாரணையிலும் சொல்லியுள்ளேன். சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 4.45 மணிக்கு சென்றேன். மகளிர் சுய உதவிக் குழுவிலிருந்து கடன் வாங்கி வட்டிக்கு கொடுப்பது வழக்கம் என்றால் சரியல்ல. அதுபோல் அ.சா.1ம் வட்டிக்கு கொடுப்பது வழக்கம் என்றால் இல்லை. வட்டி பணத்தை திரும்ப கொடுக்காததால் எதிரியின் அம்மாவை அ.சா.1 தகாத வார்த்தைகளால் ஏசினார் என்றால் இல்லை. அதனால் எதிரியின் அம்மா புகார் கொடுத்து விடுவார் என அ.சா.1க்கு வேறு எங்கோ ஏற்பட்ட காயத்தை கொண்டு பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது மொத்தம் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என தெரியாது. வழக்கு சம்பவம் நடைபெற்றிருந்தால் யார் யார் இருந்தார்கள் என எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. எதிரி வழக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.